# மாலைக்கதிர்

Maalaikkathir

சாயல் - 03 வள்ளுவர் ஆண்டு 2055 தை 07 திங்கட்கிழமை 20.01.2025 கதிர் 102







## ராஜபக்ஷக்களின் படுதோல்விக்கு ஊழல், மோசடி ஆட்சியே காரணம்

### அமைச்சர் சுனில் குமார கமகே விளாசல்



ராஜபக்ஷக்களின் ஊழல், மோசடி ஆட்சியே அவர்களின் படுதோல்விக்குப் பிரதான காரணம் என்று இளைஞர் அலுவல்கள் மற்றும் விளையாட்டுத் துறை அமைச்சர் சுனில் குமார கமகே தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறுகையில்,

“கடந்த தேர்தல்களில் ராஜபக்ஷக்கள் வரலாறு காணாத வகையில் படு-தோல்வியடைந்துள்ளனர்.

7➤

## ராஜபக்ஷக்கள் இனி மீண்டெழவே முடியாது!

### அடித்துக் கூறுகின்றது அநுர அணி



ராஜபக்ஷக்கள் இனி மேல் மீண்டெழ முடியாது என்று விவசாயம் மற்றும் கால்நடை பிரதி அமைச்சர் நாமல் கரு ணாரத்ன தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறுகையில்,

“ராஜபக்ஷக்கள் அரசியலில் இருந்து தோற்

7➤

# ராஜபக்ஷக்களின் அரசியலுக்கு ஒருபோதும் முடிவு கட்ட முடியாது!

## அநுர தரப்புக்கு நாமல் இப்படி பதில்



**ராஜபக்ஷக்களை அரசியலில் இருந்து ஒருபோதும் வீழ்த்த முடியாது என்று ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தேசிய அமைப்பாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான நாமல் ராஜபக்ஷ தெரிவித்தார்.**

**இது தொடர்பில் அவர் மேலும் கூறுகையில்,**

“ராஜபக்ஷக்கள் கடந்த இரண்டு தேசிய தேர்தல்களிலும் பின்னடைவைச் சந்தித்திருக்கின்றார்கள் என்பது மட்டுமே உண்மை. ஆனால், அவர்களை அரசியலில் இருந்து ஒருபோதும் வீழ்த்த முடியாது. இதை அநுரவின் கட்சிக்காரர்கள் புரிந்துகொள்ள வேண்டும்.

ஏனெனில், அநுரவின் கட்சியைச்சேர்ந்த அமைச்சர்கள் மற்றும் பிரதி அமைச்சர்களில் சிலர் அடிப்படை அரசியல் அறிவு தெரியாமல் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்து வருகின்றார்கள்.

அவர்கள் ராஜபக்ஷக்களின் அரசியல் வரலாற்றை ஒரு தடவை மீட்டுப் பார்க்க வேண்டும். சிறுபிள்ளைத்தனமாக அவர்கள் கருத்து வெளியிடுவதால் அவர்களின் கட்சிக்கே அவமானம்.” - என்றார்.

## வடக்கு வேலையற்ற பட்டதாரிகள் யாழில் இன்று பெரும் போராட்டம்




வடக்கு மாகாண வேலையற்ற பட்டதாரிகள் யாழ்ப்பாணத்தில் கவனயீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

வேலையற்ற பட்டதாரிகள் சங்கத்தின் ஏற்பாட்டில் யாழ். நகரிலுள்ள உலகத்தமிழாராச்சி படுகொலை நினைவுத்

7➤



## முன்னாள் அமைச்சர் விஜயமுனி சொய்சா பிணையில் விடுவிப்பு

சட்டவிரோதமாகப் பொருத்தப்பட்ட லொறியைப் பயன்படுத்தினார் எனக் கூறி

7➤

## பொலிஸ் ஆணைக்குழு மீது ஜனாதிபதி அநுர அதிருப்தி



தேசிய பொலிஸ் ஆணைக்குழுவின் மீது ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க அதிருப்தி வெளியிட்டுள்ளார். இடமாற்றங்கள் தொடர்பாக ஆணைக்குழுவின் நடவடிக்கைகள் மீதே அவர் தனது அதிருப்தியை வெளியிட்டுள்ளார்.

அண்மையில் இடம்

7➤

### தேசிய மக்கள் சக்தியின்

## பொதுமக்கள் தொடர்பாடல் அலுவலகம் யாழில் திறப்பு



தேசிய மக்கள் சக்தியின் பொது மக்கள் தொடர்பாடல் அலுவலகம் இன்று யாழ்ப்பாணத்தில் திறந்து வைக்கப்பட்டது.

7➤

## சீரற்ற காலநிலையால் 16 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் பாதிப்பு



கடந்த சில நாட்களாக நாடு முழுவதும் பெய்து வரும் கன மழையால் ஏற்பட்ட சீரற்ற கால நிலை காரணமாக

7➤

## பொதுமக்களுடன் பயணித்து குறைகளை அறிந்த அமைச்சர்



புகையிரதப் பயணத்தின் போது பொது மக்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் தொடர்பில் நேரடி அனுபவத்தைப் பெற்றுக்கொள்ளும் நோக்குடன் தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தின் போக்

7➤

- பக்கம் சாராச் செய்திகளுடன் மக்களுக்கான மாலை இதழ் -

# சர்ச்சைகளுக்கு மத்தியில் திருவள்ளுவர் சிலை திரை நீக்கம்






கொழும்பு, ஜன 20

நீதிமன்ற தடை உத்தரவு பெறப்பட்ட நிலையில் சர்ச்சைக்கு மத்தியில் திருவள்ளுவர் சிலை கொட்டும் அடை மழைக்கும் மத்தியில் திரை நீக்கம் செய்து வைக்கப்பட்டுள்ளது.

அம்பாறை மாவட்டம் கல்முனை மாநகர சபைக் குட்பட்ட கிட்டங்கி வீதியில் அமைந்துள்ள கல்முனை தமிழர் கலாசார பேரவை வளாகத்தில் குறித்த சிலை பொலிஸாரின் பாதுகாப்பிற்கும் மத்தியில் ஞாயிற்றுக கிழமை மாலை உத்தியோகபூர்வமாக திறந்து வைக்கப்பட்டுள்ளது.

குறித்த சிலை திரை நீக்கம் செய்யும் நிகழ்வில் மட்டக்களப்பு இராமகிருஷ்ண மிஷன் மேலாளர் சுவாமி நீலமாதவானந்தா ஜீ மற்றும் வடக்கு பிரதேச செயலாளர் ரி.ஜே அதிசயராஜ் ஆகியோர் கலந்து கொண்டனர்.

மேலும் கல்முனை தமிழர் கலாசார அபிவிருத்தி பேரவை உறுப்பினர்கள் உட்பட கல்முனை பிராந்திய இளைஞர் அமைப்புகள் பொதுமக்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

அத்துடன் கல்முனை பகுதியில் நிறுவப்பட்ட திருவள்ளுவர் சிலை அனுமதியற்ற கட்டுமானம் என குறிப்பிட்டு ஏழு நாட்களுக்குள் அகற்ற மாநகர சபை உத்தரவு பிறப்பித்துள்ளது.

கல்முனை தமிழர் கலாசார அபிவிருத்தி பேரவையால் ஞயிற்றுக்கிழமைகல்முனை தமிழர் கலாசார அபிவிருத்தி பேரவை வளாகத்தில் திருவள்ளுவர் சிலை திறக்கப்பட உள்ளதாகவும் அந்த திறப்பு விழாவுக்கான அழைப்பிதழில் கல்முனை மாநகரசபை ஆணையாளர் ஏ.ரி.எம்.றாபி கௌரவ அதிதியாக கலந்து கொள்ள உள்ளதாகவும் அச்சிடப்பட்டிருந்த நிலையில் கல்முனை மாநகர சபையினால் கல்முனை தமிழர் கலாசார அபிவிருத்திப் பேரவை செயலாளருக்கு முகவரியிட்டு வெள்ளிக்கிழமை “கல்முனை கல்லடிக்குளப் பிரதேசத்தில் அனுமதியற்ற கட்டுமானம் என்ற தலைப்பில் கடிதமொன்று அனுப்பப்பட்டுள்ளது.

அந்த கடிதத்தில் எமது KMC/Eng/App/2023 ஆம் இலக்க 2023.04.25 ஆம் திகதிய மற்றும் KMC/WD/COMP/10 ஆம் இலக்க 2023.09.07 ஆம் திகதிய கடிதங்களுக்கு மேலதிகமாக, தாங்கள் மேற்படி இடத்தில் கட்டுமானம் ஒன்றை மேற்கொண்டுள்ளமையும், சிலை ஒன்றை அமைத்துள்ளமையும் அவதானிக்கபட்டுள்ளது. மேற்குறித்த கட்டுமானம் மற்றும் சிலை வைப்பு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு உரிய சட்ட நடைமுறைகளுக்கு அமைவாக கல்முனை பிரதேச செயலகத்திலிருந்து காணி தொடர்பான அனுமதிப்பத்திரத்தினையும், கல்முனை மாநகர சபையினூடாக நிர்மாணத்தினை மேற்கொள்வதற்குரிய அனுமதியினையும் பெற்ற பின்னரே குறித்த குறித்த காணிக்குள் நிர்மாண வேலைகளை மேற்கொள்ளுமாறு ஏற்கனவே மேற்குறித்த கடிதங்கள் மூலம் அறிவுறுத்தல் வழங்கப்பட்டிருந்தது.

ஆகவே இவ்வறிவுறுத்தல் கிடைக்கப்பெற்று ஏழு நாட்களுக்குள் தங்களால் அனுமதியின்றி செய்யப்பட்ட நிர்மாண வேலைகளை அகற்றி ஆதனத்தினை முன்பிருந்த நிலைக்குக் கொண்டுவருமாறு வேண்டப்படுகின்றீர். தவறும் பட்சத்தில் தங்களுக்கெதிராக சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படுமென்பதனை அறியத்தருகின்றேன் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

கல்முனை தலைமையக பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரியின் முறைப்பாட்டிற்கமைய கல்முனை நீதிவான் நீதிமன்ற பதில் நீதிவான் அஹமட்லெப்பை நாதீர் கல்முனை கல்லடி நில குளத்தில் கல்முனை மாநகர சபையின் அனுமதியின்றி சட்டவிரோதமாக நிர்மாணிக்கப்பட்டுள்ள திருவள்ளுவர் சிலை திறப்பு விழா நடவடிக்கைகளில் ஈடுபடுவதிலிருந்து கல்முனை தமிழ் காலாச்சார பேரவை தலைவர் செயலாளர் உப தலைவர் ஆகியோருக்கு 1979 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க குற்றவியல் நடவடிக்கை முறை சட்டக்கோவை பிரிவு 106(1) இன் கீழான தடை உத்தரவு பிறப்பித்திருந்தார்.

மேலும் குறித்த சட்டவிரோத கட்டுமான நடவடிக்கையால் பல்லின இனங்கள் வாழும் இப்பிரதேசத்தில் இனமுறுகல் ஏற்படக்கூடிய வாய்ப்புள்ளதாகவும் குறித்த குறித்த திறப்பு விழாவினை உடனடியாக தடை செய்து கட்டளை வழங்குமாறு விண்ணப்பம் செய்துள்ளபடியால் மேற்குறித்த விடயங்களைக் கருத்தில் கொண்டு குறித்த திறப்புவிழா நடவடிக்கைகளை இன்றிலிருந்து 14 நாட்களுக்கு தடைசெய்கின்ற விதமாக இத்தால் உமக்கு எதிராக தடையுத்தரவு பிறப்பிக்கப்படுகின்றது என அதில் குறிப்பிடப்பட்டிருந்தது.

மேலும் குறித்த சிலை திறப்பு விழாவுக்கு பிரதம அதிதியாக அம்பாறை அரசாங்க அதிபர் சிந்தக்க அபேவிக்ரம கலந்துகொள்ளவுள்ளதாக அறிவிக்கப்பட்டிருந்த நிலையில் கல்முனை தமிழர் கலாசார அபிவிருத்தி பேரவை அமைந்துள்ள காணி குத்தகை முறையான விதத்தில் இல்லையென்றும் அங்கு நிர்மாணிக்கப்பட்டுள்ள நிர்மாணிப்புக்கள் அனுமதியில்லாத முறையற்ற விதத்தில் அமைந்துள்ளமை தொடர்பில் விமர்சனங்கள் எழுந்து வண்ணம் இருக்கும் நிலையில் இப்போது இந்த விடயம் பேசுபொருளாக மாறியுள்ளது.

## போர் நிறுத்தத்தை வரவேற்றது இலங்கை



கொழும்பு, ஜன 20

காஸா போர் நிறுத்த ஒப்பந்தம் நிலையானதாக இருக்கும் என்று நம்புவதாக இலங்கை வெளியுறவு, வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலா அமைச்சு அறிக்கையொன்றை வெளியிட்டுள்ளது.

பிணைக் கைதிகள் மற்றும் கைதிகளை பரிமாறிக் கொள்ளவும், உள்நாட்டில் இடம்பெயர்ந்தவர்களை காஸா பகுதியில் உள்ள தங்கள் வீடுகளுக்குத் திரும்பவும், காஸா பகுதி மக்களுக்கு மனிதாபிமான உதவிகளை வழங்கவும் அனுமதிக்கும் வகையில், போர் நிறுத்த ஒப்பந்தம் நிலையானதாக இருக்கும் என்று இலங்கை நம்புவதாக அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பாலஸ்தீனத்திலும் அப்பிராந்தியத்திலும் மிக விரைவில் அமைதி நிலைநாட்டப்படும் என்று எதிர்பார்க்கப்படுவதாக தொடர்புடைய அறிக்கை மேலும் தெரிவித்துள்ளது

## அஸ்வெசும இரண்டாம் கட்டம் தொடர்பான தகவல்

கொழும்பு, ஜன 20

அஸ்வெசும இரண்டாம் கட்டத்திற்கான விண்ணப்பங்களை சமர்ப்பித்த குறைந்த வருமானம் கொண்ட குடும்பங்களின் மக்கள் தொகை கணக்கெடுப்பு நாளை (21) தொடங்கும் என்று நலன்புரி நன்மைகள் சபை தெரிவித்துள்ளது.

இரண்டாம் கட்டத்திற்காக நலன்புரி நன்மைகள் சபை சுமார் 800,000 விண்ணப்பங்களைப் பெற்றுள்ளது.

அதற்கமைய, குறித்த விண்ணப்பங்களில் இருந்து நலத்திட்ட உதவிகளைப் பெற தகுதியானவர்களைத் தேர்ந்தெடுக்கும் நோக்கில், வீடு வீடாகச் சென்று இந்த மக்கள் தொகை கணக்கெடுப்பு நடத்தப்படும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

அஸ்வெசும திட்டத்தின் முதல் கட்டத்திற்காக சமர்ப்பிக்கப்பட்ட 3.4 மில்லியன் விண்ணப்பங்களில் சுமார் 1.8 மில்லியன் பேர் அஸ்வெசும நலன்புரி நன்மைகளைப் பெற தகுதியானவர்களாக தெரிவாகினர்.

எனினும், தற்போது 1.72 மில்லியன் பயனாளிகளுக்கே இந்த நலத்திட்ட உதவிகளை வழங்கி வருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது

## பஸ் விபத்தில் 14 பேர் காயம்



கொழும்பு, ஜன 20

காத்தான்குடியிலிருந்து கொழும்பு நோக்கி பயணித்த பஸ்ஸொன்று இன்று காலை விபத்துக்குள்ளாகியுள்ளது.

சேருநுவர-கந்தளாய் வீதியில் உள்ள கல்லாறு இராணுவ முகாமுக்கு முன்னால் உள்ள வளைவில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

குறித்த விபத்தில் சுமார் 14 பேர் காயமடைந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

பஸ் வேகக்கட்டுப்பாட்டை இழந்த நிலையில் வீதியை விட்டு விலகி மரமொன்றுடன் மோதியதில் இந்த விபத்து ஏற்பட்டுள்ளது.

(ஐ)

# தேர்தலில் வெற்றி பெறுவது அவசியம்

கொழும்பு, ஜன 20

அரசாங்கம் ஆரம்பித்துள்ள வேலைத்திட்டத்தை முன்னெடுத்துச் செல்ல வேண்டுமானால், இந்த வருடம் ஏப்ரலில் நடைபெறவுள்ள உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் வெற்றி பெறுவது அவசியம் என மக்கள் விடுதலை முன்னணியின் (ஜேவிபி) பொதுச் செயலாளர் டில்வின் சில்வா வலியுறுத்தினார்.

கொழும்பில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றிய அவர், நாட்டை பௌதீக ரீதியாகவும் ஒழுக்க ரீதியாகவும் மாற்றும் வேலைத்திட்டத்தை அரசாங்கம் ஆரம்பித்துள்ளதாகவும், அதற்கான முயற்சியில் சவால்களை எதிர்கொள்ள வேண்டியுள்ளதாகவும் தெரிவித்தார்.

நாட்டை மாற்றுவதற்கு மக்கள் 5 வருட ஆணையை வழங்கியுள்ளதாகவும், எனவே முன்வைக்கப்படும் பல்வேறு விமர்சனங்களால் யாரும் கலங்க வேண்டாம் என்றும் அவர் கூறினார். “ஆணை ஆறு மாதங்களுக்கு இருந்தால் நாங்கள் குழப்பமடைய வேண்டும். எங்களுக்கு ஐந்து ஆண்டுகள் ஆணை உள்ளது மற்றும் போதுமான நேரம் உள்ளது,” என்று அவர் கூறினார்.



வீழ்ச்சியடைந்த பொருளாதாரத்தில் கடந்த இரண்டு மாதங்களில் அரசாங்கம் பாரிய வெற்றியைப் பெற்றுள்ளதாகத் தெரிவித்த சில்வா, நாட்டை அபிவிருத்தி செய்வதற்கு தேவையான அடித்தளத்தை அரசாங்கம் அமைத்துள்ளதாகவும் தெரிவித்தார்.

விரயம் மற்றும் பொதுப் பணத்தை துஷ்பிரயோகம் செய்வதை அரசு தடுத்துள்ளது, ஓய்வூதியம் ரூ.3000 ஆல் உயர்த்தப்பட்டது, அஸ்வெசும உதவித்தொகை உயர்த்தப்பட்டது, பாடசாலை மாணவர்களுக்கு ரூ. 6,000 எழுதுபொருட்கள் வாங்க வழங்கப்பட்டதுடன், மின் கட்டணம் போன்றவை குறைக்கப்பட்டுள்ளன.

வரிசைகள் நீடிக்கும், டொலருக்கு நிகரான ரூபாய் மதிப்பு குறையும், நாங்கள் ஆட்சிக்கு வந்ததும் பங்குச் சந்தை வீழ்ச்சியடையும் என எதிர்க்கட்சிகள் கூறின, ஆனால் ஸ்ரீ அரசாங்கத்தால் பொருளாதாரத்தையும், பங்குச் சந்தையையும் வலுப்படுத்தவும், டொலரை ரூ.300 ற்கு கீழ் வைத்திருக்கவும் முடிந்தது என்று சில்வா கூறினார்.

“ஜனாதிபதி தனது வெளிநாட்டு விஜயங்களில் கடந்த காலங்களைப் போன்று பாரிய தூதுக்குழுக்களுடன் செல்லவில்லை. ஜனாதிபதி அனுரகுமார திஸாநாயக்க தனது சீனப் பயணத்தில் ஏழு அல்லது எட்டு பேருடன் மாத்திரமே சென்றிருந்தார். நாம் பொதுப் பணம் விரயமாக்கப்படுவதை பெருமளவு குறைத்துள்ளோம்,” என்று அவர் கூறினார்.

நாட்டை மாற்றுவதில் அரசாங்கம் கடினமான பணியை செய்து வருகிறது என்றார். “மோசடி மற்றும் ஊழலை தடுக்க முயற்சிக்கும் போது, இதுபோன்ற செயல்களில் ஈடுபடுபவர்கள் அதை எதிர்க்கின்றனர். நாங்கள் வீதி விதிகளை அமல்படுத்த முயற்சிக்கும்போது, விதிகளை கடைபிடிக்க தயங்குபவர்கள் அதை எதிர்க்கின்றனர்,” என்று அவர் கூறினார்.

எதிர்க்கட்சிகளின் விமர்சனங்களால் மனம் தளராமல், நல்ல பணியை தொடர வேண்டும் என்றார். (ஐ)

# இளம் பெண்ணின் சடலம் மீட்பு



கொழும்பு, ஜன 20

மன்னார் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட தோட்டக்காடு புகையிரத கடவை யின் அருகில் இளம் பெண் ஒருவரின் சடலம் திங்கட்கிழமை (20) காலை அடையாளம் காணப்பட்டுள்ளது.

தலைமன்னாரில் இருந்து கொழும்பு நோக்கி திங்கட்கிழமை (20) அதிகாலை 4.30 மணியளவில் பயணித்த புகையிரதத்தில் குறித்த பெண் மோதி உயிரிழந்திருக்கலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த பெண் மன்னார் ஜீவபுரம் பகுதியில் வசித்து வந்துள்ள நிலையில் வெள்ளம் காரணமாக தற்காலிகமாக தோட்டக் காட்டில் உள்ள உறவினர் வீட்டில் தங்கியிருந்த நிலையில் குறித்த சம்பவம் இடம்பெற்றுள்ளது.

குறித்த மரணம் தொடர்பாக மன்னார் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

# இளம் குடும்பஸ்தர் மரணம்

*கொழும்பு, ஜன 20*



*வெள்ள நீரில் அடித்துச் செல்லப்பட்ட இளம்குடும்பஸ்தர் ஒருவர் சடலமாக மீட்கபட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.*

*இந்தச் சம்பவம் ஞாயிற்றுக்கிழமை (19) வெலிகந்தை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட முத்துக்கள் எனும் பகுதியில் வைத்து இடம்பெற்றுள்ளது. சேனபுர பகுதியில் திருமணம் முடித்துள்ள வாழைச் சேனை - பிறைந்துறைச்சேனை பகுதியைச் சேர்ந்த 37 வயதுடைய றிஸ்வான் எனும் நபரே இவ்வாறு மரணமடைந்துள்ளதாக தெரிய வந்துள்ளது. தனது மனைவி மற்றும் உறவினர் ஒருவருடன் அந்நபர் செல்லும் போதே இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.*

*கரப்பொல - முத்துக்கல் வழியாக சேனபுர பகுதிக்கு செல்லும் போது மூவரும் வெள்ளநீரில் அகப்பட்டுள்ளனர்.*

*அதில், இளம் குடும்பஸ்தர் நீரில் அடித்துச் செல்லப்பட்ட நிலையில் சடலமாக மீட்கப்பட்டுள்ளதுடன், அவரது மனைவி மற்றும்மற்றைய நபர் மரக்கிளை ஒன்றினைப் பிடித்து உயிர் தப்பியுள்ளனர்.*

*மரணமடைந்த நபரின் உடல் மருத்துவப் பரிசோதனைக்காக வெலிகந்தை வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள் ளதுடன், இந்த சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை வெலிகந்தை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.*

*(ஐ)*

# எனக்கு எதுவும் தெரியாது

கொழும்பு, ஜன 20



முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, கதிர்காமத்தில் சட்டவிரோதமான முறையில் நிர்மாணிக்கப்பட்டு, ஜி.ராஜபக்ஷ என்ற பெயரில் மின்சாரக் கட்டணத்துடன் இணைக்கப்பட்ட கட்டடத்திற்கும் தனக்கும் தொடர்பு இல்லை என தெரிவித்துள்ளார்.

கேள்விக்குள்ளாகியுள்ள குறித்த கட்டிடம் கதிர்காமம் மாணிக்கக் கங்கைக்கு அருகில் உள்ள முன்பதிவு காணியில் 12 அறைகளைக் கொண்ட கட்டிடம் ஆகும்.

குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தினர் சம்பவம் பற்றி வினவிய போது, முன்னாள் ஜனாதிபதி குறித்த சொத்துக்களுடன் தமக்கு தொடர்பு இருப்பதாக தெரிவிக்கப்படுவதை மறுத்துள்ளார், அதேவேளை மின்சாரக் கட்டணம் தொடர்பில் தனக்குத் தெரியாது எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

அரசு நிலத்தில் சட்டவிரோதமாக கட்டிடம் கட்டப்பட்டது குறித்து குற்றப் புலனாய்வுப் பிரிவினர் விசாரணை நடத்தினர்.

இந்த விசாரணை முதலில் நல்லாட்சி அரசாங்கத்தின் போது ஆரம்பிக்கப்பட்ட போதிலும், கோட்டாபய ராஜபக்ச ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்டதைத் தொடர்ந்து அது நிறுத்தப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கோட்டாபய ராஜபக்ச 2025 ஆம் ஆண்டு ஜனவரி 17 ஆம் திகதி குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் விசாரிக்கப்பட்டார். இந்நிலையில், முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் மகனுமான யோஷித ராஜபக்ச இதற்கு முன்னர் ஜனவரி 03 ஆம் திகதி குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் விசாரிக்கப்பட்டார். இரண்டு ராஜபக்சேக்களும் சொத்துக்களுடனான தொடர்பை மறுத்துள்ளனர்.

குறித்த சொத்து 2010 ஆம் ஆண்டுக்கு முன்னர் நிர்மாணிக்கப்பட்டதாகவும் இராணுவக் குழு ஒன்றின் உழைப்பினால் கட்டப்பட்டதாகவும் விசாரணைகள் மூலம் தெரியவந்துள்ளது.

யோஷித ராஜபக்சவின் பாதுகாப்பிற்கு நியமிக்கப்பட்டுள்ள இலங்கை கடற்படையைச்சேர்ந்த ஒருவரே கட்டடத்தின் கட்டுமானப் பணிகளுக்குப் பின்னர் கட்டிடத்தை ஆக்கிரமித்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

# மொரட்டுவை பொலிஸ் நிலையத்திற்கு முன் பதற்றம்

கொழும்பு, ஜன 20

மொரட்டுவை பொலிஸ் நிலையத்திற்கு வெளியே இன்று காலை 100 இற்கும் மேற்பட்ட மக்கள் ஒன்று கூடி அப்பகுதியில் வசிப்பவர்கள் பலர் கைது செய்யப்பட்டதற்கு எதிர்ப்புத் தெரிவித்ததால் அங்கு பதற்றமான சூழல் ஏற்பட்டது. அப்பகுதியில் உள்ள தேவாலயம் ஒன்றின் முன் நிர்மாணிக்கப்பட்ட பந்தல் காரணமாக தனிநபர்கள் குழுவொன்று வீதியை மறித்ததால் அமைதியின்மை தொடங்கியதாக பொலிஸார் தெரிவித்தனர்.

போக்குவரத்து அதிகாரிகள் தடையை அகற்ற முயன்றபோது, அவர்களுக்கு எதிர்ப்பு தெரிவிக்கப்பட்டது, இதனால் மோதல் ஏற்பட்டது. சம்பவத்தின் போது இரண்டு பொலிஸ் உத்தியோகத்தர்கள் தாக்கப்பட்டு தற்போது பாணந்துறை வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர். தாக்குதல் மற்றும் குழப்பம் தொடர்பில், கடமைகளுக்கு இடையூறு விளைவித்த ஐந்து பேரை மொரட்டுவ பொலிஸார் கைது செய்துள்ளனர். இதையடுத்து, கைது செய்யப்பட்டவர்களைக் கண்டித்து அப்பகுதி மக்கள் பொலிஸ் நிலையம் முன்பு திரண்டு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

(ஐ)

# காவிரி–குண்டாறு நதிநீர் இணைப்பு திட்டத்திற்கு தடை விதிக்க உச்ச நீதிமன்றம் மறுப்பு!



காவிரி-குண்டாறு நதிநீர் இணைப்பு திட்டத்திற்கு தடை விதிக்க உச்ச நீதிமன்றம் மறுப்பு தெரிவித்துள்ளது.

காவிரி - வைகை - குண்டாறு இணைப்பு திட்டத்தை செயற்படுத்துவதற்கான நடவடிக்கைகள் தமிழக அரசால் சில ஆண்டுகளாக மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

ஆனால் காவிரி-குணடாறு இணைப்பு திட்டம் உட்பட காவிரி ஆற்றில் நிறைவேற்றப்படும் நீர்பாசன திட்டங்களுக்கு எதிர்ப்பு தெரிவித்து கர்நாடக அரசு உச்ச நீதிமன்றத்தில் கடந்த 2021-ம் ஆண்டு வழக்கு தொடர்ந்தது.

கர்நாடக அரசு மனுவில், காவிரி இறுதித் தீர்ப்பின் அடிப்படையில் தமிழகத்திற்கு ஒதுக்கப்பட்ட தண்ணீரை விட கூடுதலாக நீரை எடுத்துக் கொள்ள உரிமையே கிடையாது என கர்நாடக அரசு தாகல் செய்த மனுவில் குறிப்பிடப்பட்டிருந்தது. காவிரி - வைகை - குண்டாறு இணைப்புத் திட்டம் மூலமாக தமிழகத்திற்கு கூடுதலாக 45 டிஎம்சி தண்ணீர் கிடைக்கும் என்றும், அது கர்நாடகாவில் தண்ணீர் பிரச்சனையை ஏற்படுத்தலாம் எனவும் மனுவில் கர்நாடக அரசு தெரிவித்திருந்தது. ஆகவே, காவிரி - குண்டாறு திட்டத்தை நிறைவேற்றுவதற்கு அனுமதி வழங்கக் கூடாது என்று கர்நாடகா தரப்பில் கேட்டுக்கொள்ளப்பட்டது.

அதுமட்டுமில்லாமல் காவிரியின் குறுக்கே எந்தவிதமான நீர்பாசன திட்டங்களையும் செயற்படுத்த தமிழ்நாட்டிற்கு அனுமதி அளிக்கக்கூடாது என்றும், குமாரமங்கலம் - ஆதனூர் இடையே கொள்ளிடம் ஆற்றின் குறுக்கே தடுப்பணை கட்டுவதற்கு, நாகை, தஞ்சை, நாமக்கல், முசிறி, சீர்காழி போன்ற இடங்களில் தடுப்பணைகள் கட்டும் திட்டங்களுக்கும் தடை விதிக்க வேண்டும் என்றும் வலியுறுத்தி இருந்தது.

இந்த வழக்கு உச்சநீதிமன்றத்தில் இன்று விசாரணைக்கு வந்த நிலையில் வழக்கை விசாரித்த நீதிபதிகள், காவிரி-குண்டாறு நதிநீர் இணைப்பு திட்டத்தை தமிழக அரசு செயல்படுத்த தடை விதிக்க முடியாது என்று கூறி, இடைக்கால தடை விதிக்க மறுப்பு தெரி வித்தனர்.

மேலும், காவிரி-குண்டாறு நதிநீர் இணைப்பு திட்டத்திற்கு தடைவிதிக்க கோரிய கர்நாடக அரசின் கோரிக்கையையும் உச்சநீதிமன்றம் நிராகரித்தது.

# சந்திரபாபு நாயுடு மகனுக்கு துணை முதல்வர் பதவி?- பவன் கல்யாணுக்கு ஏற்பட்டுள்ள சிக்கல்!



துணை முதல் மந்திரியாக தற்போது பவன் கல்யாண் பதவி வகித்து வரும் நிலையில் லோகேஷிற்கு துணை முதல் மந்திரி பதவி வழங்க வேண்டும் என்ற கோரிக்கை கட்சியில் வலுத்து வருவதால் சிக்கல் நிலை ஏற்பட்டுள்ளதாக ஆந்திர அரசியல் வட்டாரங்களில் பரவலாக கருத்து காணப்பட்டு வருகின்றது.

ஆந்திராவில் கடந்த சட்டமன்ற தேர்தலில் தெலுங்கு தேசம் கட்சி ஜனசேனா மற்றும் பா.ஜ.க.வுடன் கூட்டணி அமைத்து தனி பெரும்பான்மையுடன் ஆட்சியைப் பிடித்தது.

தெலுங்கு தேசம் கட்சி தலைவர் சந்திரபாபு நாயுடு முதல் மந்திரியாகவும், ஜனசேனா கட்சித் தலைவர் நடிகர் பவன் கல்யாண் துணை முதல் மந்திரியாகவும் உள்ளனர். சந்திரபாபு நாயுடுவின் மகன் நாரா லோகேக்கு மந்திரி பதவி வழங்கப்பட்டது.

மந்திரியாக உள்ள நாரா லோகேஷ்க்கு துணை முதல் மந்திரி பதவி வழங்க வேண்டும் என முன்னாள் மந்திரியும் தெலுங்கு பேசும் எம்.எல்.ஏ.வான சோமி ரெட்டி சந்திரமோகன் ரெட்டி மற்றும் பொலிடா பீரோ உறுப்பினர் சீனிவாச ரெட்டி மூத்த கட்சி தலைவர்கள் சந்திரபாபு நாயுடுவுக்கு கோரிக்கை விடுத்து வருகின்றனர்.

தேர்தலுக்கு முன்பாக லோகேஷ் நடைபயணமாக சென்று நேரடியாக மக்களை சந்தித்தார் இதனால் தெலுங்கு தேசம் கட்சி ஆட்சியைப் பிடித்தது. இதேபோல் தெலுங்கு தேசம் கட்சியில் 1 கோடி பேரை உறுப்பினராக சேர்த்து இருக்கிறார். இதனால் லோகேஷ் துணை முதல் மந்திரி பதவிக்கு 100 சத வீதம் தகுதியானவர் என தெரிவித்துள்ளனர்.

அவருக்கு துணை முதல் மந்திரி பதவி வழங்கப்பட்டால் பவன் கல்யாணின் தெலுங்கு தேசம் மற்றும் ஜனசேனா கட்சி கூட்டணியில் சிக்கல் ஏற்படும் என கூறப்படுகிறது.

# உழைக்கும் வர்க்கத்தினருக்கு அழைப்பு விடுத்த ராகுல்காந்தி!



நாடாளுமன்ற எதிர்க் கட்சி தலைவர் ராகுல் காந்தி 'வெள்ளை டி-சர்ட் இயக்கம்' தொடங்குவதாக தனது 'எக்ஸ்' பக்கத்தில் அறிவித்துள்ளார்.

அதில், அவர் மேலும் கூறியிருப்பதாவது இன்று ஏழைகள் மற்றும் உழைக்கும் வர்க்கத்தினரை மோடி அரசு கண்டுகொள்வது இல்லை. குறிப்பிட்ட சில பெருமுதலாளிகளை மேலும் வளப்படுத்து வதில்தான் கவனம் செலுத்தி வருகிறது. இதனால், ஏற்றத்தாழ்வு அதிகரித்து வருகிறது. தங்கள் ரத்தம் மற்றும் வியர்வையால் நாட்டை வளப்படுத்தும் உழைக்கும் வர்க்கத்தினரின் நிலைமை மோசமாகி வருகிறது. அவர்கள் பல்வேறு வகையான அநீதி மற்றும் அராஜகங்களை தாங்கும் நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர்.

இத்தகைய சூழ்நிலையில், அவர்களுக்கு நீதியும், உரிமைகளும் கிடைக்க வலிமையாக குரல் எழுப்புவது நம் அனைவரது பொறுப்பு. இந்த சிந்தனையுடன், 'வெள்ளை டி-சர்ட் இயக்கம்' தொடங்கி உள்ளோம். இதில் திரளாக சேருமாறு இளைஞர்களையும், உழைக்கும் வர்க்கத்தினரையும் கேட்டுக் கொள்கிறேன்.

பொருளாதார நீதியில் நம்பிக்கை இருந்தால், வெள்ளை டி-சர்ட் அணிந்து, இயக்கத்தில் பங்கு பெறுங்கள்.

இதில் இணையவும், விரிவான தகவல்களை பெறவும் இணையதளத்தை அணுகலாம் அல்லது '9999812024' என்ற எண்ணுக்கு 'மிஸ்டுகால்' கொடுக்கலாம் என அவர் கூறியுள்ளார்.




# டொனால்டு டிரம்புக்கு மணல் சிற்பம் வரைந்து வாழ்த்து தெரிவித்த சுதர்சன் பட்நாயக்!

அமெரிக்க ஜனாதிபதியாக டொனால்டு டிரம்ப் இன்றைய தினம் பதவியேற்க உள்ள நிலையில் அவருடைய மணல் சிற்பத்தை வரைந்து சுதர்சன் பட்நாயக் வாழ்த்து தெரிவித்துள்ளார்.

ஒடிசா மாநிலத்தைச் சேர்ந்த மணல் சிற்ப கலைஞர் சுதர்சன் பட்நாயக், நாட்டில் நடக்கும் மகிழ்ச்சியான சம்பவங்கள் மற்றும் துக்க நிகழ்வுகளை பூரி கடற்கரையில் மணல் சிற்பங்களாக செதுக்கி மக்களின் மனங்களில் தாக்கத்தை உண்டாக்கி வருகிறார்.

இதையடுத்து, டொனால்டு டிரம்புக்கு பிரதமர் மோடி உள்பட பல்வேறு உலக தலைவர்கள் வாழ்த்து தெரிவித்தனர்.

இந்நிலையில், சுதர்சன் பட்நாயக் பூரி கடற்கரையில் 47 அடி உயரமுள்ள டொனால்டு டிரம்ப் மணல் சிற்பத்தை வரைந்து, அவருக்கு வாழ்த்து தெரிவித்துள்ளார்.

அதில், வாழ்த்துகள், வெள்ளை மாளிகைக்கு நல்வரவு என எழுதியுள்ளமை குறிப்பிடத்தக்கது.



பெண்ணை சக மனுஷியாக பார்க்க வேண்டும் என்கிற கருத்தியல், அதுசார்ந்த விரல் விட்டு எண்ணக்கூடிய அமைப்புகளால் மட்டுமே பேசப்பட்டு வருகின்றன. அதற்குபதில், குடும்பங்களில், மத நிறுவனங்களில், ஊடகங்களில் இந்தக் கருத்தியல் அரசின் நடவடிக்கைகள் மூலம் செயல் பாட்டுக்கு வர வேண்டும். அரசின் முக்கிய பொறுப்புகளில் இருக்கக்கூடியவர்கள் பயன்படுத் துகிற வார்த்தைகள் எல்லாமே, பெண்ணை சக மனுஷியாக நடத்துகிற வண்ணம் மாற வேண்டும்.

# இனியொரு விதி செய்வோம்!

## மன்னிப்பபெல்லாம் தேவையில்லை

உலக அளவில் 736 மில்லியன் பெண்கள் உடல் ரீதியான பாலியல் வன்முறையைச் சந்தித்திருக்கிறார்கள். 16-58 சதவிகித பெண்கள் சமூக வலைதளங்களில் அநாகரிகமான கொமென்ட்ஸ் முதல் போட்டோ மார்பிங் வரை பாலியல் ரீதியான தொல்லைகளை சந்தித்துக் கொண்டிருக்கிறார்கள். தவிர, உள்ளூர் போராட்டம் முதல் நாடுகளுக்கிடையேயான போர் வரை பெண்களும் குழந்தைகளும் சந்திக்கின்ற கொடுமைகள் 70 சதவிகிதம் என்கிறது ஐ.நா. 2018-2022 வரை எடுக்கப்பட்ட தரவுகளின்படி, 35 சதவிகித பெண்கள் தன்னுடைய துணையாலோ அல்லது வேறொரு ஆணாலோ பாலியல் வன்முறைக்கு ஆளாகியிருக்கிறார்கள். 137 பெண்கள் அவர்களுடைய குடும்பத்தினராலேயே கொலை செய்யப்பட்டிருக்கிறார்கள். இதனையொட்டியே, இந்த வருடம் இனி மன்னிப்பதற்கில்லை என்ற அர்த்தம் தொனிக்கும் ‘சூழேநுஒஉரளந’ என்கிற ஹேஷ்டேகை ஐ.நா. வெளியிட்டுள்ளது என்று எண்ணத் தோன்றுகிறது.

நவம்பர் 25 International Day for the Elimination of Violence against Women. ஐ.நா. இந்த தினத்துக்கான இந்த வருடமாக தீம் ஆக ‘ஒவ்வொரு பத்து நிமிடங்களுக்கும் ஒரு பெண் கொல்லப்படுகிறாள்’ என்ற வாசகத்தை வெளியிட்டுள்ளது (Every 10 minutes> a woman is killed).

“பெண்கள் மீதான வன்முறை என்றாலே நமக்கு உடனே நினைவுக்கு வருவது பாலியல் வன்முறை மட்டுமே. ஆனால், இன்னும் பல வன்முறைகள் தினம் தினம் பெண்கள் மீது நிகழ்ந்துகொண்டேதான் இருக்கின்றன. குடும்ப வன்முறை, சாதியம் சார்ந்த வன்முறை, மதம் காரணமான அல்லது மதவெறி அரசியல் காரணமான வன்முறை, போராட்டங்கள் மற்றும் இயக்கங்களில் இயங்குகிற பெண்கள் மீது காவல்துறை செய்கிற மற்றும் லோக்கப்பில் நடக்கிற அரச வன்முறை, வறுமை என்கிற பொருளாதார வன்முறை என அடுக்கிக்கொண்டே போகலாம்.

உலகமே உயிருக்குப் பயந்து லொக்டவுனில் இருந்த கொரோனா பெருந்தொற்று காலத்தில்கூட குடும்ப வன்முறைகள் அதிகரித்துவிட்டன என புள்ளி விவரங்கள் தெரிவித்தன. ‘நிழல் பெருந்தொற்று’ (Shadow Pandemic) என ஐ.நா.வும் அதை குறிப பிட்டது.

பெண்ணை சக மனுஷியாக பார்க்க வேண்டும்என்கிற கருத்தியல், அதுசார்ந்த விரல் விட்டு எண்ணக்கூடிய அமைப்புகளால் மட்டுமே பேசப்பட்டு வருகின்றன. அதற்குபதில், குடும்பங்களில், மத நிறுவனங்களில், ஊடகங்களில் இந்தக் கருத்தியல் அரசின் நடவடிக்கைகள் மூலம் செயல்பாட்டுக்கு வர வேண்டும். அரசின் முக்கிய பொறுப்புகளில் இருக்கக்கூடியவர்கள் பயன்படுத்துகிற வார்த்தைகள் எல்லாமே, பெண்ணை சக மனுஷியாக நடத்துகிற வண்ணம் மாற வேண்டும்.

ஒரு புள்ளியில் இருந்து பெண்களுக்கு எதிரான குற்றங்களைக் குறைக்க முடியாது. ஒரு குற்றம் நடந்தவுடனே அரசு அதில் தலையீடு செய்வது, சட்டம் பாதிக்கப்பட்டவர்களுக்கு உடனடியாக நியாயம் செய்வது என எல்லாமும் கைகோக்க வேண்டிய நிலை அது. பாதிக்கப்பட்ட பெண்கள் இதை அவர்கள் ஒழுக்கம் சம்பந்தப்பட்ட, கௌரவம் சம்பந்தப்பட்ட, மானம் சம்பந்தப்பட்ட பிரச்னையாக இல்லாமல், வன்மு றையாக மட்டுமே பார்க்க வேண்டும்.

நாம் பெண்களுக்கு எதிரான குற்றச் சம்பவங்களுக்கு எதிராக போராடிக்கொண்டிருக்கிறோம். கூடுதலாக, பெண்களை இரண்டாம் தர பிரஜையாக நடத்த வேண்டுமென்கிற சித்தாந்தத்தை எதிர்த்து போராட வேண்டும்.

‘நீ ஏன் பத்து மணிக்கு வெளியே போனாய் நீ ஏன் அப்படி உடை அணிந்தாய் நீ ஏன் ஆண் நண்பனோடு சினிமாவுக்குப் போனாய் ‘ என்று இன்னமும் பாதிக் கப்பட்ட பெண்களை நோக்கியே விரல் நீட்டிக கொண்டிருக்கிறோம்.

இவ்வளவு காலமாக, பெண்களுக்கு எதிரான குற்றங்களுக்கும் குற்றவாளிகளுக்கும் மன்னிப்பு கொடுத்துக்கொண்டிருந்தோம். இனி அது முடியாது என்கிறது ஐ.நா.வும். அந்த ஹேஷ்டேக் தற்போதைய சூழலுக்கு மிகப்பொருத்தமான ஒன்றே.



# டிரம்ப் உறுதி அளித்ததை தொடர்ந்து அமெரிக்காவில் டிக் டாக் செயலி மீண்டும் செயல்பட தொடங்கியது!

டிரம்ப் உறுதி அளித்ததை தொடர்ந்து அமெரிக்காவில் டிக் டாக் செயலி மீண்டும் செயல்பட தொடங்கியுள்ளது.

அமெரிக்க அதிபர் ஜோ பைடன் தேசிய பாதுகாப்பு உள்ளிட்ட காரணங்களை மேற்கோள் காட்டி சீனாவின் பைட்டான்ஸ் நிறுவனத்திற்கு சொந்தமான டிக்டாக் செயலியை 270 நாட்களுக்குள் விற்பனை செய்வதற்கு அவகாசம்வழங்கும்சட்டத்தை கடந்தாண்டு ஏப்ரல் மாதம் இயற்றினார்.

அவ்வாறு விற்பனை செய்யாவிட்டால் ஆப்பிள் மற்றும் கூகுள் பிளே ஸ்டோரில் இருந்து டிக்டாக் செயலியை அகற்ற உத்தரவிடப்படும் என அந்தச் சட்டத்தில் கூறப்பட்டிருந்தது.

அமெரிக்காவில் டிக்டாக் செயலிக்கு கிட்டத்தட்ட 17 கோடி கணக்குகள் உள்ள நிலையில் நேற்று முதல் தடை அமுலுக்கு வந்துள்ளது.

இதனையடுத்து தற்காலிகமாக டிக்டாக் செயலியின் சேவையை நிறுத்துவதாக அந்நிறுவனம் அறிவித்தது. இதனிடையே ஆப்பிள் ஐ ஸ்டோர், கூகுள் பிளே ஸ்டோரிலிருந்து டிக்டாக் நீக்கம் செய்யப்பட்டது.

இந்நிலையில், அமெரிக்காவில் நேற்று சேவையை நிறுத்திய டிக் டாக் செயலி மீண்டும் செயல்பட தொடங்கியது.

அமெரிக்க அதிபராக இன்று பதவி யேற்கவுள்ள டொனால்டு டிரம்ப், டிக் டாக் செயலிக்கு விதிக்கப்பட்ட தடையை நீக்குவதாக அளித்துள்ள உறுதியைத் தொடர்ந்து மீண்டும் சேவையைத் தொடங்குவதாக அந்நிறுவனம் விளக்கம் அளித்துள்ளது.






## டொனால்டு டிரம்புடன் முகேஷ் அம்பானி தம்பதியினர் சந்திப்பு!

அமெரிக்க அதிபராக டொனால்டு டிரம்ப் இன்று உத்தியோக பூர்வமாக பதவியேற்கவுள்ள நிலையில் இந்திய தொழிலதிபர் முகேஷ் அம்பானி மற்றும் அவரது மனைவி நீட்டா அம்பானி இருவரும் அவரை சந்தித்து வாழ்த்தியுள்ளனர்.

அமெரிக்க அதிபராக உள்ள ஜோ பைடன் பதவிக்காலம் முடிவடைவதை அடுத்து, புதிய அதிபரைத் தேர்ந்தெடுப்பதற்கான தேர்தல், கடந்த ஆண்டு இறுதியில் நடந்தது. இதில் குடியரசு கட்சியைச் சேர்ந்த முன்னாள் அதிபர் டொனால்டு டிரம்ப் அபார வெற்றி பெற்றார்.

இதையடுத்து அமெரிக்காவின் 47-வது அதிபராக டிரம்ப் பதவியேற்க உள்ளார். அவருக்கு அந்நாட்டு உச்சநீதிமன்ற நீதிபதி ஜான் ராபர்ட்ஸ் பதவிப் பிரமாணம் செய்து வைக்க உள்ளார்.

டிரம்ப் பதவியேற்பு விழாவில் இந்தியா சார்பில் வெளியுறவு மந்திரி ஜெய்சங்கர் பங்கேற்க உள்ளார் என வெளியுறவு அமைச்சகம் உறுதிப்படுத்தியுள்ளது. மேலும், சீன அதிபர் ஜி ஜின்பிங், இத்தாலி பிரதமர் ஜார்ஜியா மெலோனி, அர்ஜென்டினா அதிபர் ஜாவியர் மிலேய், எல் சல்வேடார் தலைவர் நயீப் புகேல், பிரேசில் அதிபர் ஜெயிர் போல்சனரோ உள்பட பலருக்கு அழைப்பு விடுக்கப்பட்டது.

இதற்கிடையே, பிரபல தொழிலதிபரான முகேஷ் அம்பானி, நீடா அம்பானி தம்பதிக்கும் டிரம்ப் பதவியேற்பு விழாவில் பங்கேற்க அழைப்பு விடுக்கப்பட்டது. இதற்காக அம்பானி தம்பதியினர் நேற்று அமெரிக்கா சென்றனர்.

இந்நிலையில், பதவியேற்பு விழாவுக்கு முன் துணை அதிபராக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள ஜே.டி.வான்ஸ் வாஷிங்டன் டிசியில் அளித்த இரவு விருந்தில் முகேஷ் அம்பானியும், நீடா அம்பானியும் பங்கேற்றனர். அப்போது டொனால்டு டிரம்பை முகேஷ் அம்பானி, நீடா அம்பானி ஆகியோர் சந்தித்துப் பேசினர்.

இந்தச் சந்திப்பின்போது டிரம்புக்கு இருவரும் வாழ்த்து தெரிவித்தனர். மேலும் இந்தியா-அமெரிக்கா உறவு இன்னும் ஆழமாக அமையும் என்ற நம்பிக்கை இருப்பதாக அம்பானி தெரிவித்தார்.

## பாதுகாப்பாக இஸ்ரேல் திரும்பிய ஹமாஸ் அமைப்பினரால் விடுவிக்கப்பட்ட பிணைக்கைதிகள்!



ஹமாஸ்அமைப்பினரால் பிணையக்கைதிகளாககைது செய்யப்பட்டு வைத்திருந்த மூன்று இஸ்ரேலியர்கள் பாதுகாப்பாக அவர்களது நாடுகளுக்கு திரும்பியுள்ளனர்.

இஸ்ரேல் மற்றும் காசாவின் ஹமாஸ் அமைப்பு இடையிலான போர் 15 மாதங்களுக்கு பிறகு முடிவுக்கு வந்துள்ளது.

கத்தார், எகிப்து, அமெரிக்கா ஆகிய நாடுகளின் மத்தியஸ்தத்தால் இருதரப்புக்கும்இடையே ஏற்பட்ட போர் நிறுத்த ஒப்பந்தம் இன்று அமலுக்கு வந்தது. இந்த போர் நிறுத்த ஒப்பந்தம் 6 வாரங்களுக்கு நடைமுறையில் இருக்கும்.

கடந்த 2023-ம் ஆண்டு இஸ்ரேலுக்குள் புகுந்து ஹமாஸ் அமைப்பினர் தாக்குதல் நடத்தி 250-க்கும் மேற்பட்டோரை பிணைக் கைதிகளாக பிடித்துச்சென்றனர். பின்னர் தற்காலிகமாக போர் நிறுத்தத்தின்போது 120-க்கும் மேற்பட்ட பிணைக்கைதிகள் விடுவிக்கப்பட்டனர். ஹமாஸ் அமைப்பினரிடம் இன்னும் 94 பிணைக் கைதிகள் உள்ளனர்.

போர் நிறுத்தம் நேற்று மதியம் 12 மணிக்கு அமுலுக்கு வரவிருந்தது. ஒப்பந்தப்படி இருதரப்பும் விடுதலை செய்யப்பட உள்ள நபர்கள் பெயர் விவரங்களை 24 மணி நேரத்திற்கு முன் தெரிவிக்க வேண்டும். இஸ்ரேல் விடுதலை செய்ய உள்ள 90 பாலஸ்தீனியர்களின் பெயர் விவரத்தை நேற்று முன்தினம் வெளியிட்டது.

ஆனால் ஹமாஸ் ஆயுதக்குழு விடுதலை செய்ய வேண்டிய இஸ்ரேலிய பிணைக்கைதிகளின் விவரங்களை வெளியிடவில்லை. சுமார் 2 மணி நேர தாமதத்திற்குபின் விடுதலை செய்யப்பட உள்ள இஸ்ரேலிய பிணைக்கைதிகள் 3 பேரின் பெயர் பட்டியலை ஹமாஸ் வெளியிட்டது.

அதன்படி, ரோமி கொனின் வயது 24, ஏமி டமாரி வயது 28, டோரன் ஸ்டான்பிரிசர் வயது 31 ஆகிய 3 பேரை விடுதலை செய்வதாக ஹமாஸ் அறிவித்தது.

இந்நிலையில், ஹமாஸ் அமைப்பினரால் விடுதலை செய்யப்பட்ட 3 பிணைக்கைதிகளும் பத்திரமாக நாடு திரும்பியுள்ளனர் என இஸ்ரேல் பாதுகாப்பு படையினர் தெரிவித்தனர்.

## கொலம்பியாவில் கொரில்லா வன்முறை: கிளர்ச்சியாளர்கள் நடத்திய தாக்குதலில் 80 பேர் பலி!

தென் அமெரிக்க நாடான கொலம்பியாவில் இரு இடதுசாரி கொரில்லா ஆயுதக் குழுக்கள் இடையிலான மோதலில் 80 பேர் உயிரிழந்தனர்.

வெனிசுலாவை ஒட்டிய கொலம்பிய எல்லைப் பிரதேசத்தில் உள்ள கேட்டடம்போ பகுதியில் தேசிய விடுதலை இராணுவம், கொலம்பிய புரட்சிகர ஆயுதப் படை ஆகிய இரு ஆயுதக் குழுக்களுக்கு இடையில் மோதல் வெடித்துள்ளது.

ஃபார்க் அமைப்பு கடந்த 2017 ஆம்ஆண்டு நிராயுதபாணியை செயல்படாமல் இருந்தது. இந்நிலையில் ஃபார்க் அமைப்பைச் சேர்ந்தவர்களை வீடு வீடாகத் தேடிச் சென்று இஎல்என் அமைப்பினர்படுகொலை செய்து வருகின்றனர்.

இரு குழுக்களின் வன்முறைக்கு மத்தியில் பொதுமக்கள் சிக்கியுள்ளதால் அங்கு பரபரப்பான சூழல் நிலவுகிறது. கடந்த வியாழக்கிழமை முதல் 3 நாளில் இதுவரை 80 பேர் உயிரிழந்துள்ளதாக கொலம்பிய அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

கடந்த வியாழன் முதல் வன்முறை சம்பவங்கள் வேகமாக அதிகரித்து வரும் நிலையில் அப்பகுதிகளில் இருந்து சுமார் 5,000 பேர் தங்கள் வீடுகளை கைவிட்டு இடம்பெயர்ந்துள்ளனர். பாதுகாப்பை பலப்படுத்த 5,000க்கும் மேற்பட்ட வீரர்கள் அப்பகுதிக்கு அனுப்பப்பட்டுள்ளதாக ராணுவம் தெரிவித்துள்ளது.

இந்தத் தாக்குதலைத் தொடர்ந்து, இஎல் என்னுடன் நடத்திவந்த போர் நிறுத்தப் பேச்சுவார்த்தையை கொலம்பியா அரசு நிறுத்திவைத்துள்ளது.

நாட்டின் மிகப்பெரிய கோகைன் வர்த்தக தலமாக உள்ள இப்பகுதியில் யார் வர்த்தகத்தை கட்டுப்படுத்துவது என்பது தொடர்பாக போட்டி குழுக்கள் பல ஆண்டுகளாக இப்பகுதியில் சண்டையிட்டு வருகின்றன.



## பொலீஸ்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அண்மையில் இடம் பெற்ற நிகழவொன்றில் கலந்து கொண்டு உரையாற்றிய ஜனா திபதி அனுரகுமார திசாநாயக்க, பொலீஸ் அதிகாரிக ளின் இடமாற்றங்களை தனி ஒருவரது விருப்பப்படி செய்ய முடியாது என்றும், தேசிய பொலீஸ் ஆணைக்குழுவின்

மூலம் தான் செல்ல வேண்டும் என்றும் கூறினார்.

"தேசிய பொலீஸ் ஆணைக்குழு இட மாற்றங்களை செயல்படுத்த வேண்டும். ஆனால் சிலரது இடமாற்றங்கள் குறித்து ஆணைக்குழு தயக்கம் காட்டியுள்ளது. அதனால், தேசிய பொலீஸ் ஆணைக்குழு மீது நானும் தயக்கம் காட்ட வேண்டிய நிலைமை ஏற்பட்டுள்ளது" என்றார்.

அவர் அங்கு மேலும் குறிப்பிடுகையில், இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவில் தாக்கல் செய்யப்பட்ட பல இலஞ்ச, ஊழல் வழக்குகள் முன்னைய அரசாங்கங்கள் விசாரணைக்கு அனுமதியளிக்காததனால் சுமார் 15 ஆண்டுகளுக்கு மேலாகத் தேக்கமடைந்துள்ளன. இதனால், இலஞ்ச ஒழிப்பு ஆணைக்குழு, சட்டமா அதிபர் திணைக்களம் மற்றும் நீதித்துறையில் தாமதங்கள் மற்றும் தேக்கங்கள் ஏற்பட்டுள்ளன. அவை அனைத்தும் நீக்கப்பட்டு, ஊழல் வழக்குகள் தொடர்பான பல கோப்புகள் மீண்டும் திறக்கப்பட்டு, இலஞ்ச, ஊழல் ஆணைக்குழுவினால் விசாரிக்கப்படும்.

கடந்த 15 ஆண்டுகளில் ஒவ்வொரு அதிகாரி மீதும் சுமார் 100 முதல் 200 கோப்புகள் உள்ளன. அவர்கள் மீது நீதிமன்றத்தில் எப்படி வழக்குகளை தாக்கல் செய்வது? இந்தக் குழப்பத்தின் காரணமாக இலஞ்ச, ஊழல் ஆணைக் குழு செயலிழந்து போயுள்ளது." என்று குறிப்பிட்டார்.

மேலும், தேசிய முக்கியத்துவம் வாய்ந்த கடந்த கால புகார்களை இந்த மாதம் மீண்டும் திறந்து வழக்குகளைத் தாக்கல் செய்ய இலஞ்ச ஊழல் ஆணைக்குழு ஒப்புக்கொண்டுள்ளதாகவும், பிப்ரவரியில் இதுபோன்ற பல வழக்குகளை தாக்கல் செய்ய எதிர்பார்க்கப்படுவதாகவும் ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்க தெரிவித்தார்.

இதேநேரம், இலஞ்சம் மற்றும் ஊழல் தொடர்பான தேக்கமடைந்த வழக்குகளைத் தீர்ப்பதற்காக பல்வேறு புதிய நியமனங்கள் மூலம் குற்றப் புலனாய்வுத்திணைக்களம்மற்றும்இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவை வலுப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் ஜனாதிபதி மேலும் கூறினார்.

## பொது....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சக்தி அரசாங்கத்தின் போக் குவரத்து, நெடுஞ்சாலைகள், துறை முகங்கள் மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சர் பிமல் ரத்னாயக்க இன்று காலை எந்தவித ஆராவாரமுமின்றித் தனி ஒருவராகப்

புகையிரதத்தில் பயணம் செய்துள்ளார்.

மொரட்டுவவில் இருந்து கொழும்பு நோக்கிச் சென்ற அலுவலக நேரப் புகை யிரதத்தில், சன நெருக்கடிக்கு மத தியில் சாதாரண பயணியாக அமைச்சர் பயணித்ததைக் கண்ட பொதுமக்கள் பலர் அமைச்சரைப் புகைப்படம் எடுத்துத் தமது சமூக வலைத் தளங்களில் வெளியிட்டதையடுத்தே அமைச்சர் புகையிரதத்தில் பயணித்த விடயம் ஊடகங்களுக்கு வெளிகியுள்ளது.

முன்னேற்பாடுகள் எதுவுமில்லாமல், அதிகாரிகள் யாருக்கும் அறிவிக்காமல் அமைச்சர் மேற்கொண்ட இந்தக் கள ஆய்வுப் பயணத்தின் போது, புகையிரதங்களில் பயணிகள் எதிர்கொள்ளும் பல பிரச்சனைகள் குறித்து அமைச்சரின் கவனத்துக்குப் பயணிகள் கொண்டு வந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

அடிக்கடி ஏற்படும் பயணத் தாமதம், புகையிரதத்தினுள் மின் விசிறிகள் பழுதடைதல், மாற்றுத் திறனாளிகள் ரயிலில் ஏறும் போது ஏற்படும் சவால்கள், தண்டவாளங்கள் மற்றும் ரயில் நிலையங்களில் உள்ள சுகாதாரமற்ற நிலைமை போன்றவை பற்றி பயணிகள் அமைச்சரிடம் தெரிவித்ததாகக் கூறப்படுகிறது. (ஐ)

## ராஜபக்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அவர்களை மக்கள் அடியோடு நிராகரித்து விட்டார்கள். ராஜபக்ஷக்களின் ஊழல், மோசடி ஆட்சியே அவர்களின் படு தோல்விக்குப் பிரதான காரணம்.

ஊழல், மோசடிகளில் ஈடுபட்ட ராஜபக்ஷக்கள் தேர்தல்களில் படுதோல்வியடைந்தாலும்சட்டத்தின்பிடியில்இருந்து தப்பவே முடியாது. அவர்கள் இழைத்த குற்றங்களுக்கு அவர்கள் தண்டனையை அனுபவித்தே தீர வேண்டும்.

தேசிய மக்கள் சக்தி ஆட்சியில் ஊழல், மோசடிகளுக்கு இடமேயில்லை. ஊழல், மோசடிகளுக்கு முற்றுப்புள்ளி வைப்பதே எமது அரசின் பிரதான நோக்கம்." - என்றார்.

## ராஜபக்ஷக்கள் இனி....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கடிக்கப்பட்டு விட்டார்கள். அவர்களின் மொட்டுக் கட்சியை மக்கள் அடியோடு சிதைத்துவிட்டார்கள். அவர்களின் குடும்ப ஆட்சிக்கு முற்றுப்புள்ளி வைக்கப்பட்டுள்ளது. அவர்கள் இனிமேல் மீண்டெழ முடியாது.

ஜனாதிபதி, பிரதமர் பதவிகளுக்கு ஆசைப்பட்ட நாமல் ராஜபக்ஷ இறுதியில் தேசியப்பட்டியல் ஊடாகவே நாடாளுமன்றம் வந்தார். அவர் இன்று வெட்கம் இல்லாமல் வீரவசனம் பேசுகின்றார்.

சீனாவுக்குச் சென்று வந்த ஜனாதிபதி அநுரகுமாரவை விமர்சிப்பதற்கு நாமல் ராஜபக்ஷவுக்கு எந்தத் தகுதியும் கிடையாது.

தனது தந்தை மஹிந்த ராஜபக்ஷவுடன் இணைந்து கொலைகளை, ஊழல், மோசடிகளைச் செய்த நாமல் ராஜபக்ஷ இன்று நல்ல மனிதர் போல் வேடம் போட முயல்கின்றார். என்ன வேடம் போட்டாலும் ராஜபக்ஷ குடும்பத்தினரால் இனிமேல் மீண்டெழ முடியாது." - என்றார்.

## முன்னாள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கைது செய்யப்பட்ட முன்னாள் அமைச்சர் விஜித் விஜயமுனி சொய்சா பிணையில் விடுவிக்கப்பட்டார்.

நேற்று கைது செய்யப்பட்ட அவர் இன்று காலை பண்டாரவளை நீதிவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டார். இதன்போது அவரை 2 இலட்சம் ரூபா சரீரப் பிணையில் விடுவிக்க நீதிவான் உத்தரவிட்டார்.

மேலும், இந்த வழக்கை எதிர்வரும் பெப்ரவரி 6 திகதியன்று மீண்டும் விசாரிக கவும் உத்தரவிடப்பட்டது.

## சீரற்ற...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஐந்து மாகாணங்களில் 5 ஆயிரத்து 738 குடும்பங்களைச் சேர்ந்த 16 ஆயிரத்து 930 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.

அதன்படி, வட மத்திய மாகாணத்தில் 93 குடும்பங்களைச் சேர்ந்த 356 பேரும், வடக்கு மாகாணத்தில் 491 குடும்பங்களைச் சேர்ந்த 1,496 பேரும், கிழக்கு மாகாணத்தில் 5 ஆயிரத்து 86 குடும்பங்களைச் சேர்ந்த 14 ஆயிரத்து 806 பேரும், மத்திய மாகாணத்தில் 7 குடும்பங்களைச் சேர்ந்த 33 பேரும், ஊவா மாகாணத்தில் 67 குடும்பங்களைச் சேர்ந்த 239 பேரும் என மொத்தமாக 5 ஆயிரத்து 738 குடும்பங்களைச் சேர்ந்த 16 ஆயிரத்து 930 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர் என்றும் அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் குறிப்பிட்டுள்ளது.

சீரற்ற காலநிலை காரணமாக ஒருவர் உயிரிழந்துள்ளார் எனவும், மூன்று பேர் காயமடைந்துள்ளனர் எனவும், 98 வீடுகள் சேதமடைந்துள்ளன எனவும், 77 குடும்பங்களைச் சேர்ந்த 239 பேர் எட்டு பாதுகாப்பு நிலையங்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர் எனவும் அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் மேலும் தெரிவித்துள்ளது.

## வடக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)







தூபி முன்பாக இன்று காலை இந்தப் போராட்டம் ஆரம்பமானது. இதன்போது அவர்கள் பல்வேறு வாசகங்கள் எழுதப்பட்ட பதாகைக ளைத் தாங்கியவாறு கோஷங்களை எழுப்பிக் கொண்டு வடக்கு மாகாண ஆளுநர் அலுவலகத்துக்குப் பேரணி யாகச் சென்றனர்.

"மேலும் வேலை வேண்டும் வேலை வேண்டும் பட்டதாரிகளுக்கு வேலை வேண்டும், பரீட்சைகள் எழுதி எழுதிப் பயனில்லாமல் போய்விட்டது, அரசாங்கமே பட்டதாரிகளுக்கு வேலையை வழங்கு, படித்தும் வேலையில்லாமல் திரியும் அவலம்" எனப் பல்வேறு கோஷங்களைப் போராட்டக்காரர்கள் எழுப்பியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## பொதுமக்கள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)







யாழ். பலாலி வீதி, கந்தர்மடத்தில் இன்று காலை 9.30 மணிக்குக் கடற்றொழில் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகரால் திறந்து வைக்கப்பட்டது.

இந்த நிகழ்வில் தேசிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர்களான கருணைநாதன் இளங்குமரன், ஜெயச்சந்திரமூர்த்தி றஜீவன் மற்றும் கட்சி உறுப்பினர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# இருபது நாட்களில் அறுவர் சுட்டுக்கொலை

இந்த ஆண்டு இதுவரையான 20 நாட்களில் இடம்பெற்ற 8 துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்களில் 6 பேர் கொல்லப்பட்டுள்ளனர் என்று இலங்கை பொலிஸ் தெரிவித்துள்ளது.

இறந்தவர்களில் 4 பேர் திட்டமிட்ட குற்றவாளிகள் எனச் சந்தேகிக்கப்படுகின்றனர் என்று பொலிஸ் செய்தித் தொடர்பாளர் அலுவலகம் தெரிவித்துள்ளது. மேலும், இந்தத் துப்பாக்கிச்சூட்டுச் சம்பவங்களில் 5 பேர் படுகாயமடைந்துள்ளனர்.







இந்நாளிதழ் நல்லூர், இல - 68, Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 20.01.2025 இல் வெளியிடப்பெற்றது.

# மக்கள் நம்பிக்கை வைக்கும் வகையில் அரச சேவையை உருவாக்க வேண்டும்

## வடக்கு மாகாண ஆளுநர் வேதநாயகன் வலியுறுத்து















“ஜனாதிபதியின் எண்ணக்கருவில் முன்னெடுக்கப்படும் ‘கிளீன் ஸ்ரீலங்கா’ வேலைத்திட்டத்தில் உள்ளூராட்சி மன்றங்களுக்கு முக்கிய பங்கிருக்கின்றது. அதைச் சிறப்பாகச் செயற்படுத்த வேண்டும். மக்கள் நம்பிக்கை வைக்கும் அரச சேவையை உருவாக்க வேண்டும்.” - என்று வடக்கு மாகாண ஆளுநர் நாகலிங்கம் வேதநாயகன் தெரிவித்தார்.

“உள்ளூராட்சி மன்றங்கள் பெற்றுக்கொள்ளும் வருமானங்களைத் தமது பிரதேச மக்களின் வாழ்வாதார உள்ளிட்ட ஏனைய மேம்பாடுகளுக்குச் செலவு செய்யவேண்டும். அதைவிடுத்து அதனை நிரந்தர வைப்பிலிட்டு சேர்த்து வைத்துக்கொண்டிருக்கக் கூடாது.” - என்றும் அவர் குறிப்பிட்டார்.

பருத்தித்துறை நகர சபையின் ஆளுகைக்கு உட்பட்ட பருத்தித்துறை பொது மரக்கறிச் சந்தை இன்று வெள்ளிக்கிழமை திறந்து வைக்கப்பட்டது.

ஐரோப்பிய ஒன்றியத்தின் நிதியுதவியுடன், உள்ளூர் அபிவிருத்தி உதவித் திட்டத்தின் கீழ் 45 மில்லியன் ரூபா செலவில் இந்தச் சந்தை நிர்மாணிக்கப்பட்டுள்ளது.

பருத்தித்துறை நகர சபையின் செயலர் திருமதி தாரணி கஜரூபன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றிய வடக்கு மாகாண பிரதம செயலர் இ.இளங்கோவன், “ஒதுக்கப்படும் நிதியை உரிய காலத்தில் செலவு செய்து முடிப்பதென்பது எமக்கு மிகப்பெரிய சவாலாக இருக்கின்றது. ஆனால், இந்தக் கட்டடத்தை மிக நேர்த்தியாக உரிய காலத்தில் நிறைவேற்றிய ஒப்பந்தக்காரருக்கு நன்றி.” - என்று தெரிவித்தார். பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட ஆளுநர் நா.வேதநாயகன் தனது உரையில்,

“பௌதீக வளங்களின் முன்னேற்றம் என்பது அபிவிருத்திக்கு இன்றியமையாதது. அதேபோன்று தனித்து பௌதீக வளங்களின் முன்னேற்றம் மாத்திரமும் அபிவிருத்தியாகிவிடாது. எங்களின் சேவையை மேம்படுத்தும்போதுதான் அபிவிருத்தி முழுமையடையும். எனவே, மக்களுக்குத் தரமான, அன்பான, விரைவான சேவையை வழங்க முன்வரவேண்டும்.

தற்போது எமக்குள்ள உள்ளூராட்சி உதவி ஆணையாளர், நகர சபையின் செயலர் ஆகியோர் இளையவர்களாக இருக்கின்றார்கள். அவர்கள் உத்வேகத்துடனும் துடிப்புடனும் செயலாற்றுகின்றனர். இந்தப் பொதுச் சந்தைக்குரிய காணியைக் கொள்வனவு செய்து கட்டடம் அமைத்து இன்று மக்களுக்குக் கையளிக்கின்ற சபையின் செயலரையும் பணியாளர்களையும் பாராட்டுகின்றேன். இதேபோன்று திறம்பட பணியாற்றுவதுடன் எதிர்காலத்தில் இந்தப் பொதுச் சந்தையை பராமரிப்பதிலும்தான் இதன் வெற்றி தங்கியிருக்கின்றது.” - என்றார்.

இந்த நிகழ்வில் பருத்தித்துறை பிரதேச செயலர் சி.சத்தியசீலன், வடக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் திருமதி தேவநந்தினி பாபு, யாழ். மாவட்ட உதவி உள்ளூராட்சி ஆணையாளர் பொ.ஸ்ரீவர்ணன், பருத்தித்துறை நகர சபையின் முன்னாள் நகர பிதா யோ.இருதயராஜா, பருத்தித்துறை பிரதேச சபையின் முன்னாள் தவிசாளர் அ.சா.அரியகுமார், பருத்தித்துறை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி பிரியந்த அமரசிங்க மற்றும் வர்த்தகர்கள், பொதுமக்கள் உள்ளிட்ட பலரும் கலந்துகொண்டனர்.